செ. கு. எண்: 184 நாள்: 19–5–12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 19.5.2012

ராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி ஒன்றியம், எஸ்.எம்.இலந்தைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கே.கந்தவேல் என்பவரின் மனைவி திருமதி முத்துலட்சுமி 14.5.2012 அன்று இடி தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், குருவிகுளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மகாலிங்க கோனார் என்பவரின் மகன் திரு. கருப்பசாமி 18.5.2012 அன்று ஆடுமேய்த்துக் கொண்டிருக்கும்பொழுது மின்னல் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் அகால மரணமடைந்த முத்துலட்சுமி மற்றும் கருப்பசாமி குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விபத்துகளில் காலமான திருமதி முத்துலட்சுமி மற்றும் திரு கருப்பசாமி குடும்பங்களுக்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு: –

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.